## காரமடை நகராட்சி

2022 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30ம் நாள் செவ்வாய் கிழமை முற்பகல் 11.00 மணிக்கு காரமடை நகரமன்றத்தின் சாதாரணக் கூட்டம், காரமடை நகரமன்ற கூடத்தில், நகரமன்றத் தலைவர் அவர்களால் கூட்டப்பட்டுள்ளது. இக்கூட்டத்தில் நகரமன்றத் துணைத்தலைவர் மற்றும் அனைத்து நகரமன்ற உறுப்பினர்கள் தவறாது கலந்துகொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**முன்னிலை : திருமதி.உஷா வெங்கடேஷ், நகரமன்றத் தலைவர்**

V Ushavenkatesh
நகரமன்றத் தலைவர்,
காரமடை நகரமன்றம்.

---

பொருள் : 01

காரமடை நகராட்சி ஆணையாளரது ஜுலை-2022 மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அ.கு :- பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.1879/2021/இ1)

பொருள் : 02

காரமடை நகராட்சியின் 2021-2022 ம் ஆண்டுக்கான நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு :- பதிவு செய்யலாம்.
(ந.எ.எண்.2121/2022/இ1)

பொருள் : 03

காரமடை நகராட்சியில் 15வது நிதிக்குழு திட்டம் -2021-2022 ஆண்டிற்கு கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.31117/2021/CFC-1, நாள்.11.08.2022ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | Supply and delivery of Backhoe loader with bucket capacity 0.18 cum and operating weight of 5220 Kg. | 24.57 |
| 2 | Supply, delivery, erection, testing, commissioning of turbine pump with 6500 LPM x 50m head at raw water pumping station. | 18.00 |
| 3 | Supply, delivery, erection, testing, commissioning of 100 HP/75 KW and allied electrical works at raw water pumping station. | 12.50 |

அ.கு :- பதிவு செய்யலாம்.
(ந.எ.எண்.1646/2022/இ1)

பொருள் : 04

காரமடை நகராட்சி 2021-2022 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திருத்திய திட்ட மதிப்பீடு மற்றும் 2022-2023 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீடு தயாரித்தமைக்கும், 2021-2022 ஆம் ஆண்டிற்கான ஆண்டு கணக்கு தயாரிக்க ஏற்படும் செலவினம் ரூ.1.00 இலட்சம் நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு :- அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.1243/2022/பி1)

பொருள் : 05

காரமடை நகராட்சி நகர்மன்ற தலைவர் அவர்களுக்கு சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநரகம் அவர்களின் கடிதம் எண்.1725/2022/எம்3. நாள்.24.02.2022ல் தெரிவிக்கப்பட்டுள்ள அரசு நிர்ணயிக்கப்பட்ட (Gem Portal) விலைக்கு மிகாமல் விதிகளுக்கு உட்பட்டு சாதாரணமாடல் (Basic Model) வாங்குவதற்கு நகர்மன்றத் தீர்மானம் எண்.9, நாள்.21.03.2022ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட தொகை ரூ.9.00 இலட்சத்திற்கு (ஒன்பது இலட்சம் மட்டும்) அனுமதி பெறப்பட்டது. இதனிடையில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.11135/2022/எம்3. நாள்.06.05.2022ல் நகராட்சி தலைவர்களுக்கு ஸ்கார்ப்பியோ ஈப்பு வாகனம் ரூ.16,82,000/- (ரூபாய் பதினாறு இலட்சத்தி எண்பத்தி இரண்டாயிரம் மட்டும்) வாங்க அனுமதி வழங்கியுள்ளார்.

எனவே கூடுதல் செலவினத் தொகை ரூ.7.82/- இலட்சம் மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பதிவு சான்றிதழ் பெறவும், வாகனத்திற்கு காப்பீடு மற்றும் உதிரிபாகங்கள் பொருத்தவும் ஆகும் தொகை ரூ.3.20 இலட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு :- அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.174/2022/அ1)

பொருள் : 06

காரமடை நகராட்சி அரசாணை எண்.116, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.07.12.2021ன்படி பேரூராட்சியிலிருந்து நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அலுவலக தொலைபேசி செய்தில் தரம் உயர்த்தப்பட்ட அனைத்து நகராட்சிகளுக்கும், நகராட்சி பொறியாளருக்கு ஒரு ஈப்பு வாகனம் பொலிரோ (Gem Rate) உரிய விதிமுறைகளின்படி வாங்க அனுமதிக்கப்பட்டது. மேலும் அதற்கான செலுவுத் தொகை ரூ.9,18,373/- செலுத்த தெரிவிக்கப்பட்டது. அதன்படி மேற்படி ஈப்பு வாகனம் வாங்க நகராட்சி நிதியிலிருந்து ரூ.9,18,373/- செலுத்தியமைக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர். சென்னை அவர்களின் பின்னேற்பு பெற மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு :- 1) அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.1884/2022/அ1)

**<u>பொருள் : 07</u>**

காரமடை நகராட்சி அரசாணை எண்.116, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.07.12.2021ன்படி பேரூராட்சியிலிருந்து நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அலுவலக தொலைபேசி செய்தில் தரம் உயர்த்தப்பட்ட அனைத்து நகராட்சிகளுக்கும், நகராட்சி பொறியாளருக்கு ஒரு ஈப்பு வாகனம் பொலிரோ (Gem Rate) உரிய விதிமுறைகளின்படி வாங்கப்பட்டது. மேற்படி ஈப்பு வாகனத்திற்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பதிவு சான்றிதழ் பெறவும், வாகனத்திற்கு காப்பீடு மற்றும் உதிரிபாகங்கள் பொருத்தவும் ஆகும் செலவுத் தொகை ரூ.2.20 இலட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அ.கு :-</u> 1)** அனுமதி வழங்கலாம்.
(ந.எ.எண்.1884/2022/அ1)

**<u>பொருள் : 08</u>**

காரமடை பேரூராட்சியானது 2021 டிசம்பர் மாதம் முதல் நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு தற்போது செயல்பட்டு வருகிறது. காரமடை நகராட்சி தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றத்தில் பல்வேறு தரப்பினரால் கட்டிட அனுமதி, ஆக்கிரமிப்புகள், குத்தகை இனங்கள், குடிநீர், பொதுப் பணிகள், சொத்துவரி மற்றும் பல்வேறு பணிகள் தொடர்பாக வழக்குகள் தொடரப்பட்டுள்ள வழக்குகள் நிலுவையில் இருந்து வருகின்றன. தற்போது காரமடை நகராட்சிக்கு என சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குகளை கையாள தனியாக உயர்நீதிமன்ற வழக்கறிஞர் இதுவரை நியமனம் செய்யப்படவில்லை. எனவே இனிவரும் காலங்களில் நகராட்சிக்கு எதிராக மற்றும் நகர்மனறத்திற்கு எதிராகவோ ஏதேனும் வழக்குகள் தொடரப்படும் நிலையில் நகராட்சி சார்பாக ஆஜராக சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு.பி.சீனிவாஸ் அவர்களை நியமனம் செய்யவும் இனி வரும் வழக்குகளில் திரு.பி.சீனிவாஸ் அவர்கள் மூலமாக வழக்குகள் நடத்திடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.கு :-</u> 1)** அனுமதி வழங்கலாம்.
(ந.எ.எண்.2075/2022/எப்1)

**<u>பொருள் : 09</u>**

காரமடை பேரூராட்சியானது 2021 டிசம்பர் மாதம் முதல் நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. காரமடை நகராட்சி தொடர்பாக மேட்டுப்பாளையம் நீதிமன்றத்தில் பல்வேறு தரப்பினரால் கட்டிட அனுமதி, ஆக்கிரமிப்புகள், குத்தகை இனங்கள், குடிநீர், சொத்துவரி மற்றும் பல்வேறு பணிகள் தொடர்பாக வழக்குகள் தொடரப்பட்டு வழக்குகள் நிலுவையில் இருந்து வருகின்றன. தற்போது காரமடை நகராட்சிக்கு என மேட்டுப்பாளையம் நீதிமன்றத்தில் வழக்குகளை கையாள தனியாக வழக்கறிஞர் இதுவரை நியமனம் செய்யப்படவில்லை. எனவே காரமடை நகராட்சிக்கென தனியாக ஒரு வழக்கறிஞரை நியமிக்க நகர்மன்றத் தீர்மானம் எண்.34, நாள்.29.04.2022ல் அனுமதிக்கப்பட்டதைத் தொடர்ந்து இவ்வலுவலகம் மூலம் வழக்கறிஞர் நியமனத்திற்கு Bar Council க்கு கடிதம் அனுப்பப்பட்டது. நாளது வரை பதில் ஏதும் பெறப்படவில்லை. இந்நிலையில் திரு.எம்.வி.செந்தில்குமார்.,M.Com, B.L., வழக்கறிஞர், மேட்டுப்பாளையம் அவர்களிடமிருந்து விண்ணப்பம் பெறப்பட்டுள்ளது. எனவே இவரை நகராட்சி வழக்கறிஞராக நியனம் செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

**<u>அ.கு :-</u>** மன்றம் முடிவு செய்யலாம்.
(ந.எ.எண்.1957/2021/அ1)

**<u>பொருள் : 10</u>**

காரமடை நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு கழிவுகள் சேகரம் செய்து உரக்கிடங்கில் ஒப்படைக்கும் பணிக்கு திருவாளர்.ஸ்ரீவீரபத்திரசுவாமி டிரேடர்ஸ் நிறுவனத்திற்கு ஏற்கனவே பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிக்கு மேலும் 4 மாதங்களுக்கு தொடர்ந்து பணிகள் மேற்கொள்ள ஆகும் செலவுத் தொகை ரூ.10.40 இலட்சத்திற்கும், மேற்கண்ட நிறுவனம் ஏற்கனவே வழங்கிய குறைந்த விலைப்புள்ளியின் அடிப்படையிலேயே பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.கு :-</u> 1)** அனுமதி வழங்கலாம்.
**2)** பொது சுகாதார அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.
(ந.எ.எண்.07/2022/எச்1)

**<u>பொருள் : 11</u>**

காரமடை நகராட்சியில் பொது நிதி 2022–23ன் கீழ் 11.08.2022ம் தேதியில் கீழ்காணும் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்து வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தத் தொகை (ரூ) |
|---|---|---|---|---|
| 1. | குடிநீர் சுத்திகரிப்பு பணிக்கு குளோரின் லிக்விட் சிலிண்டர் சப்ளை செய்தல். | 5.00 | சிவாலிக் ரத்தினம் கெமிக்கல்ஸ், ஈரோடு. | 22,250/– (1No) |
| | | | ஜுபிடர் என்டர்பிரைசஸ், ஈரோடு | 25,075/– (1No) |

மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு:–** மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.எ.எண்.130/2021/இ1)

**<u>பொருள் : 12</u>**

காரமடை நகராட்சியில் பொது நிதி 2022–23ன் கீழ் 17.08.2022ம் தேதியில் கீழ்காணும் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்து வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தத் தொகை (ரூ) |
|---|---|---|---|---|
| 1. | 30W LED விளக்குகளில் ஏற்பட்டுள்ள பழுதுகள் சரிசெய்வது. | 1.50 | டி.எஸ்.எஸ். என்டர்பிரைசஸ், கோயம்புத்தூர் | 940/– (each) |
| | | | நிவி எலக்ட்ரிகல்ஸ் கோயம்புத்தூர் | 1050/– (each) |

| | | | | |
|---|---|---|---|---|
| 2. | தெருவிளக்கு தானியங்கி சுவிட்சுகளில் ஏற்பட்டுள்ள பழுதுகள் சரிசெய்வது. | 1.00 | பவர் கன்ட்ரோல் சிஸ்டம், கோயம்புத்தூர் | 5310/– (each) |
| | | | பவர் சேவர் சிஸ்டம், பொள்ளாச்சி | 5500/– (each) |
| 3. | காரமடை நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு 4 எண்கள் கணினி, 4 எண்கள் பிரிண்டர், 8 எண்கள் டோனர் (88A) சப்ளை செய்தல். | 5.70 | சிஸ்கான் சிஸ்டம்ஸ், கோயம்புத்தூர் | 4,76,260/– |
| | | | சாகர் எலக்ட்ரானிக்ஸ், பொள்ளாச்சி | 4,83,460/– |
| 4. | காரமடை நகராட்சி அலுவலக பயன்பாட்டில் உள்ள 14 எண்கள் கணினி, 12 எண்கள் பிரிண்டர்கள் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் (Antivirus and Including Spare Parts). | 1.60 | சாகர் எலக்ட்ரானிக்ஸ், பொள்ளாச்சி | 1,31,750/– |
| | | | சிஸ்கான் சிஸ்டம்ஸ், கோயம்புத்தூர் | 1,34,860/– |

மேற்காணும் பணிகளுக்கு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு:–** மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.எ.எண்.1876/2022/இ1, 1908/2022/இ1)

**பொருள் : 13**

காரமடை நகராட்சியின் அலுவலக அறிக்கைகள் மற்றும் திட்டப்பணிகள் கருத்துரு சமர்ப்பித்தல் போன்றவை நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம், சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகம், திருப்பூர் ஆகிய அலுவலகங்களுக்கு அனுப்ப அறிக்கைகள் நகல் எடுப்பதற்கும் மற்றும் நகராட்சி அலுவலகப் பணிக்கு தேவையான அறிக்கைகள் நகல் எடுப்பதற்கும் நகராட்சியில் ஜெராக்ஸ் இயந்திரம் இல்லை. எனவே அலுவலக பயன்பாட்டிற்கு ஒரு ஜெராக்ஸ் இயந்திரம் வாங்க ஆகும் செலவினத் தொகை ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு :-** அனுமதி வழங்கலாம்.
(ந.எ.எண்.2087/2022/இ1)

**பொருள் : 14**

காரமடை நகராட்சியில் மேற்கொள்ளப்படும் அனைத்து வளர்ச்சி பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி அறிக்கைகள் மற்றும் இதர விபரங்கள் ஆகியவற்றை நாளிழ்களில் விளம்பரம் செய்ய ஆகும் செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு (2022-2023) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு :-** அனுமதி வழங்கலாம்.
(ந.எ.எண்.1806/2022/இ1)

**<u>பொருள் : 15</u>**

காரமடை நகராட்சியில் இந்திய சுதந்திர திருநாட்டின் 75வது ஆண்டு சுதந்திர திருநாள் அமுத பெருவிழாவாக கொண்டாடுவதால் சுதந்திர வாரம் **11.08.2022** முதல் **15.08.2022** வரை அனைத்து வீடுகளிலும் தேசிய கொடி ஏற்றி கொண்டாட தேசிய கொடி தயாரித்து விநியோகம் செய்யவும், நகராட்சி அலுவலகம் மின்விளக்குகளால் அலங்கரித்தல், மைக் செட் அமைத்தல் மற்றும் நகர் பகுதியில் தேசிய கொடி ஏற்றுவது குறித்து அறிவிப்பு செய்தல் போன்ற நிகழ்வுகளுக்கு விலைப்புள்ளி பெற்று நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணிகள் முடிக்கப்பட்டது மன்றத்தின் பார்வைக்கும், மேற்படி பணிக்கு ஆகும் செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

இதில் சமுதாய பங்களிப்பு நிதியாக கீழ்காணும் நபர்கள் அவர்களது பங்களிப்பு தொகையினைநகராட்சிக்கு வழங்கியுள்ளார்கள்.

| வ. எண் | நிதி வழங்கியவர் பெயர் | முகவரி | தொகை (ரூ) |
|---|---|---|---|
| 1 | திரு.பு.நந்தகுமார் | 49-3, பூம்புகார் நகர், காரமடை | 100000 |
| 2 | திரு.சி.ராமமூர்த்தி | காரமடை | 10000 |
| 3 | காரை மாநகர் மளிகை வியாபாரிகள் சங்கம் | காரமடை | 16500 |
| 4 | பாவனா ஸ்டுடியோஸ் | 14, குட் எர்த் ஹேம்லெட், வெண்ணாலா, கொச்சின் | 23000 |
| | **மொத்தம்** | | **149500** |

**<u>ஆ.கு :-</u>** அனுமதி வழங்கலாம்.
(ந.எ.எண்.1922/2022/எச்1)

**<u>பொருள் : 16</u>**

காரமடை நகராட்சியில் 15வது நிதிக்குழு மான்யத் திட்டம் 2021-2022ன் கீழ் சாலைப் பணி மேற்கொள்ள கீழ்காணும் பணிகளுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறைக் கடிதம் எண்.31117/2021/சிஎப்சி, நாள்.20.06.2022ன் மூலம் நிர்வாக அனுமதியும், மண்டலப் பொறியாளர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகம், திருப்பூர் அவர்களின் செயல்முறைக் கடிதம் எண்.019/22/பி1, நாள்.24.06.2022ன் மூலம் தொழில்நுட்ப அனுமதியும் பெறப்பட்டது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வடமங்கலக்கரை முதல் சேரன் நகர்-2 14வது குறுக்கு தெரு (167001R015) மற்றும் வடமங்கலக்கரை முதல் சேரன் நகர் - 2 2வது குறுக்கு தெரு (167001R003) ஆகிய சாலைகளில் தார்சாலை அமைத்தல். | 35.58 |

மேற்படி பணிக்கு 02.08.2022 ஆம் தேதி இரு உறை முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் நேரிடையாக பணிக்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும், இணையதளம் மூலம் இரு ஒப்பந்தப்புள்ளிகளும் பெறப்பட்டது. இணைதளம் மூலம் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் தொழில்நுட்ப தகுதி இல்லாத காரணத்தால் நிராகரிக்கப்பட்டது.

மேற்படி பணிக்கு நேரிடையாக வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி உறைகளில் தொழில்நுட்பத் தகுதிக்கான உறையினை மட்டும் ( Technical Bid) **02.08.2022** அன்று கூர்ந்தாய்வு குழுவினர் முன்னிலையில் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் வரப்பெற்ற அனைத்து ஒப்பந்ததாரர்களுமே தொழில்நுட்ப தகுதிகள் பெற்றுள்ளனர். எனவே அனைத்து ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளிகள் **04.08.2022** அன்று காலை **11.30** மணிக்கு கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்யப்பட்டது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விழுக்காடு |
|---|---|---|---|---|
| **1.** | வடமங்கலக்கரை முதல் சேரன் நகர் -2 14வது குறுக்கு தெரு (167001R015) மற்றும் வடமங்கலக்கரை முதல் சேரன் நகர் -2 2வது குறுக்கு தெரு (167001R003) ஆகிய சாலைகளில் தார்சாலை அமைத்தல். | **35.58** | திரு.ஆர்.என்.வெங்கடாசலபதி | **4.50%** மதிப்பீட்டிற்கு அதிகம் |
| | | | திரு.ஆர்.எஸ்.கண்ணன் | **8.00%** மதிப்பீட்டிற்கு அதிகம் |

வரப்பெற்ற பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களுக்கு விலைகுறைப்பு செய்து தர கடிதம் அனுப்பப்பட்டது. மேற்படி அனைத்து ஒப்பந்ததாரர்களுமே தங்களது கடிதத்தில் தற்பொழுது விலையேற்றம் மற்றும் பணியாளர்களின் கூலி உயர்வு ஆகியவை காரணமாக விலைகுறைப்பு செய்து தர இயலாது எனவும் தாங்கள் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விகிதத்திற்கே பணிகளை மேற்கொள்ள அனுமதி வழங்கிட கோரியுள்ளனர். மேற்படி பணி திட்டப்பணி என்பதால் மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. இப்பணி திட்டப் பணி என்பதால் மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்க மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.
2. இவ்வொப்பந்தப்புள்ளிகள் இந்நகர்மன்றத்தின் அனுமதிக்குட்பட்டு மதிப்பீட்டிற்கு **5%** மிகாமல் இருப்பதாலும் பொதுமக்களின் நலன் கருதியும், மறு ஒப்பந்தப்புள்ளி கோருவதால் ஏற்படும் காலதாமதம், அதற்குரிய செலவினம் ஆகியவற்றினை கருத்தில் கொண்டும் இவ்வொப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
3. இவ்வொப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டிற்கு அதிகமாக இருப்பதால் , அதிகப்படியான தொகையினை இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.**1646/2022**/இ1)

**பொருள் : 17**

காரமடை நகராட்சியில் பொது நிதி 2022–23ன் கீழ் 24.08.2022ம் தேதியில் கீழ்காணும் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்து வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தத் தொகை (ரூ) |
|---|---|---|---|---|
| 1. | காரமடை நகராட்சி பொது சுகாதார வாகனம் TN 40 D 4125 அபே வாகன பழுது நீக்கம் பணிகள் மேற்கொள்ளுதல். | 1.60 | பெஸ்ட் மோட்டார் ஒர்க்ஸ், மேட்டுப்பாளையம் | 1,57,887/– |
| | | | மேட்டுப்பாளையம் அட்டோ சர்வீஸ் சென்டர், திருப்பூர் | 1,67,500/– |
| 2. | Vehicle Mount Fogging Machine | 5.50 | மைக்ரோ இன்ஜினியரிங் அன்டு கோ, கோயம்புத்தூர் | 5,45,000/– |
| | | | பியூர் பெஸ்ட் கன்ட்ரோல், கோயம்புத்தூர் | 5,48,500/– |
| 3. | BOV Repair | 1.00 | திரவியம் இன்போடெக், மதுரை | 95,800/– |
| | | | ஜோ இன்போகாம், மதுரை | 96,400/– |
| 4. | Indoor Fogging Machine (10 Nos) | 2.50 | சிஸ்டம் இன்ஜினியரிங், சென்னை | 2,32,500/– |
| | | | ஏஸ்.எஸ்.என்டர் பிரைசஸ், சென்னை | 2,38,000/– |
| 5. | Areal Gas Cylinder (250 Nos) | 1.00 | சிஸ்டம் இன்ஜினியரிங், சென்னை | 82,500/– |
| | | | எஸ்.எஸ்.என்டர் பிரைசஸ், சென்னை | 83,500/– |

மேற்காணும் பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு:–** மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.எ.எண்.130/2021/இ1)

**பொருள் : 18**

காரமடை பேரூராட்சியானது தற்போது தரம் உயர்த்தப்பட்டு நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. காரமடை நகராட்சிக்கு எதிராக மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சார்பு நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்றங்களில் பல்வேறு நிலைகளில் பல்வேறு காரணங்களுக்காக வழக்குகள் தொடரப்பட்டு வருகின்றன. காரமடை நகராட்சி சார்பில் மேற்கண்ட நீதிமன்றங்களில் வழக்குளில் ஆஜராகி வாதாடும் வழக்கறிஞர்களுக்கு வழக்கு கட்டணம் மற்றும் சட்ட கருத்துறை பெறுவதற்கு உரிய கட்டணங்கள் ஆகியவை செலுத்துவதற்கு ஆகும் செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு :-** அனுமதி வழங்கலாம்.
(ந.எ.எண்.2075/2022/எப்1)

**பொருள் : 19**

திருப்பூர் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.2530/2022/பி, நாள்.08.08.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.14262/2022/டிபி2, நாள்.18.07.2022ம் தேதிய கடிதங்களில் நகராட்சிகளுக்கு சொந்தமான மற்றும் நகராட்சி வசம் உள்ள சொத்துக்களை பாதுகாக்க ஆன்லைன் சொத்துக்கள் மேலாண்மை அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது எனவும் ஏற்கனவே உள்ள நில ஆவணங்களில் உள்ளாட்சி அமைப்புகள் பெயர் குறிப்பிடப்படாததால் நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் நீர் நிலைகள் பராமரிப்பதிலும் நிதி முகமையிலிருந்து நிதி உதவி பெறுவதில் சிக்கல்கள் எதிர்கொள்ளப்படுகிறது எனவும் மேலும் இதேபோல் பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் திறந்தவெளி (பாதுகாப்பு மற்றும் ஒழுங்குமுறை) சட்டம் 1959ன் கீழ் தமிழ்நாடு அரசின் அரசிதழில் நகர்புற எல்லைக்குள் அமைந்துள்ள பூங்கா மற்றும் விளையாட்டு மைதானங்களை அறிவிக்கும் பணியில் அரசு ஈடுபட்டுள்ளது. இப்பணி தொடர்பாக கள சரிபார்ப்பின் போது சம்பந்தப்பட்ட நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புக்கு சாதகமாக சொத்தின் தலைப்பு மாற்றப்படவில்லை என்பது கவனத்திற்கு வரப்பெற்றுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே காரமடை நகராட்சி பகுதிகளில் ஏற்கனவே அனுமதியற்ற / நகர் ஊரமைப்புத்துறை மூலம் அனுமதிக்கப்பட்ட மனைப்பிரிவுகளில் உள்ள சாலைகள், பொது ஒதுக்கீடுகள், பூங்கா, விளையாட்டுமிடம் மற்றும் திறவிடங்களை நகராட்சி பெயரில் பட்டா மாறுதல் உட்பிரிவு செய்து நகராட்சி பெயரில் பெயர் மாற்றம் செய்யவும், மேலும் நகராட்சி பகுதிகளில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான சொத்துக்களை நகராட்சி பெயரில் பட்டா மாறுதல் செய்யவும், வருவாய் துறைக்கு உரிய கட்டணங்கள் செலுத்த வேண்டியுள்ளதால் இதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.3,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு :-** அனுமதிக்கலாம்.
(ந.எ.எண்.1599/2022/எப்1)

**<u>பொருள் : 20</u>**

காரமடை நகராட்சியில் பேரூராட்சியாக இருந்த போது திடக்கழிவு மேலாண்மைப் பணி மற்றும் குடிநீர் விநியோக பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள போதிய அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் இல்லாததால் சுய உதவிக்குழுக்கள் மூலம் பணி மேற்கொள்ள ந.க.எண்.07/2021/அ4, நாள்.01.10.2021ன்படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய (1) சுபாஷ் சந்திரபோஸ் ஆண்கள் சுய உதவிக்குழு, (2)ஸ்ரீ காமாட்சி மகளிர் சுய உதவிக்குழு (3)ஸ்ரீ சமுத்திரக்கனி மகளிர் சுய உதவிக்குழு, (4))ஸ்ரீ அரங்கநாதர் சுய உதவிக்குழு ஆகிய 4 குழுக்கள் திடக்கழிவு மேலாண்மை பணிக்கும், (1) சிறுவாணி ஆண்கள் சுய உதவிக்குழு (2) பவானி ஆண்கள் சுய உதவிக்ழு ஆகிய 2 குழுக்கள் குடிநீர் விநியோக பராமரிப்பு பணி மேற்கொள்ளவும் 01.10.2022 முதல் 30.09.2022 முடிய பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மாவட்ட ஆட்சித்தலைவர், கோவை அவர்களின் கடிதம் ந.க.எண்.6217/2022/இ3, நாள்.24.06.2022ந் தேதிய செயல்முறைகள் கடிதத்தில் 2022-2023ம் நிதியாண்டிற்கு தினக்கூலி பணியாளர்களுக்கு குறைந்தபட்ச கூலி நிர்ணயம் செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. எனவே மேற்படி உத்தரவின் அடிப்படையில் மேற்படி குழுக்களுக்கு உயர்வு செய்யப்பட்ட தினக்கூலி தொகை நாள் ஒன்றுக்கு ரூ.606/- உயர்வு செய்து 3 மாதங்களுக்கு நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்கவும் அதற்கான செலவுத்தொகை ரூ.55.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**<u>அ.கு :-</u>** மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.எ.எண். 2145/2022/எச்1)

**<u>பொருள் : 21</u>**

காரமடை நகராட்சிக்கு சொந்தமான தேக்கம்பட்டி சுத்திகரிப்பு நிலையத்தில் இயங்கி வரும் 40 HP மின்மோட்டார் பழுது ஏற்பட்டுள்ளதை சரிசெய்ய ஆகும் செலவினம் ரூ.52,000/- க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.கு :-</u>** குடிநீர் அவசர அவசியம் கருதி பணி செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.எ.எண்.1983/2022/இ1)

**<u>பொருள் : 22</u>**

காரமடை நகராட்சியில் மின்தடை ஏற்படும்போது ஏற்கனவே பொருத்தப்பட்டுள்ள யு.பி.எஸ். பேட்டரி பழுதடைந்துள்ளதால் அனைத்து மின்சாதனங்களும் இயங்காமல் தடை ஏற்பட்டுவிடுகிறது. இதனால் அலுவலகத்தில் இயங்கி வரும் கணினிகள் முழுவதும் இயங்காமல் பழுது ஏற்படும் நிலையும், காணொளி ஆய்வுக்கூட்டத்தில் கலந்து கொள்வதில் தடையும் ஏற்படுகிறது. எனவே இதனை தவிர்க்கும் பொருட்டு அவசர அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளி பெற்று புதிய யு.பி.எஸ்.பேட்டரி மற்றும் உதிரிபாகங்கள் பொருத்த ஆகும் செலவினம் ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.கு :-</u>** மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.எ.எண். 2147/2022/இ1)

**<u>பொருள் : 23</u>**

திருமதி.ரா.பிரியா, 1வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் தீர்மானங்களை வாசித்தல்.

1) சேரன் நகர்-2 பகுதியில் வடிகால் வசதி செய்தல்.
2) சேரன் நகர் -2 பகுதியில் உள்ள மண்சாலைகளை தார்சாலையாக மாற்றுதல்.
3) சேரன் நகர் -2 பகுதியில் உள்ள பழுதடைந்துள்ள தார்சாலைகளை சீரமைத்தல்.
4) சேரன் நகர் -2 பகுதியில் 5000 லிட்டர் கொள்ளவு கொண்ட 3 சின்டெக்ஸ் டேங்க் அமைத்து தருதல்.
5) சேரன் நகர் -2 பகுதியில் உப்பு தண்ணீர் இல்லாத பகுதிகளில் உப்பு தண்ணீர் குழாய் அமைத்தல்.
6) சேரன் நகர் -2 பகுதியில் 1 லட்டம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத் தொட்டி கட்டுதல்.
7) சேரன் நகர் -2 பகுதி முழுவதும் 15 புதிய மின் விளக்குகள் பொருத்துதல்.

**<u>பொருள் : 24</u>**

திரு.சு.ரவிக்குமார், 3வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் தீர்மானங்களை வாசித்தல்.

1) ராஜீவ் காந்தி நகர் மற்றும் அன்னைவேளாங்கண்ணி நகர் பகுதிகளில் வடிகால் அமைத்தல்.
2) எம்.ஜி.ஆர்.நகர் பகுதியில் G.I.பைப் குடிநீர் குழாய் அமைத்து தருதல்.
3) எம்.ஜி.ஆர்.நகர் பகுதியில் புதிதாக ஆழ்துளை கிணறு அமைத்து குடிநீர் குழாய் விஸ்தரிப்பு செய்தல்.
4) அன்னைவேளாங்கண்ணி நகர் பகுதியில் உள்ள பூங்கா இடத்தில் புதிதாக ஆழ்துளை கிணறு அமைத்து குடிநீர் குழாய் விஸ்தரிப்பு செய்தல்.
5) அன்னைவேளாங்கண்ணி நகர் பகுதியில் உள்ள பூங்கா இடத்தில் பூங்கா மேம்பாடு செய்தல்.
6) எம்.ஜி.ஆர்.நகர் பகுதியில் -10 எண்ணிக்கை மின்விளக்குகள், ராஜீவ் காந்தி நகர் பகுதியில் -6 எண்ணிக்கை மின்விளக்குகள், அன்னை வேளாங்கண்ணி நகர் பகுதியில் -8 எண்ணிக்கை மின்விளக்குகள் ஆக மொத்தம் 24 மின்விளக்குகள் பொருத்துதல்.

**<u>பொருள் : 25</u>**

திரு.வ.ராம்குமார், 4வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் தீர்மானங்களை வாசித்தல்.

1) செல்வபுரம், இம்மானுவேல் நகர், சிவாஜி நகர் மற்றும் சத்யசாய் நகர் பகுதிகளில் புதிதாக ஆழ்துளை கிணறு அமைத்து உப்புநீர் குழாய் விஸ்தரிப்பு செய்தல்.
2) செல்வபுரம் பகுதியில் தமிழரசன் வீடு முதல் மணி வீடு வரை வடிகால் கட்டுதல்.
3) செல்வபுரம் பகுதியில் 3 வீதிகளில் சிறுபாலம் கட்டுதல்.
4) இம்மானுவேல் நகர் பகுதி குறுக்கு சாலையில் தார்சாலை மற்றும் வடிகால் கட்டுதல்.

**<u>பொருள் : 26</u>**

திரு.மா.ரங்கசாமி, 7வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் தீர்மானங்களை வாசித்தல்.

1) நேரு நகர் பூங்காவில் பழுதடைந்தை சின்டெக்ஸ் டேங்கை மாற்றி புதிதாக ஸ்டேண்ட் அமைத்து 5000 லிட்டர் சின்டெக்ஸ் டேங்க் பொருத்துதல்.
2) நேரு நகர் பகுதியில் உப்பு நீர் விநியோகத்திற்கு பதிக்கப்பட்டுள்ள ¾" PVC குழாயை மாற்றி 2" PVC குழாய் பதித்தல்.
3) சிவன்புரம் கொங்கு மண்டலத்திற்கு பின்புறம் தென்றல் வீதி குடி தண்ணீர் கிழக்கு மேற்கு பகுதி வீடுகளுக்கு சரியாக வருவதற்கு மாற்றியமைத்தல்.
4) குறிஞ்சி நகர் ரிலையன்ஸ் பங்க் மேற்கு பகுதி ராதிகா வீடு பகுதிக்கு தண்ணீர் சரியாக வராததை சரிசெய்தல்.
5) குறிஞ்சி நகர் ஆழ்துளை கிணற்றிலிருந்து சிவன்புரம்-II, குறிஞ்சி நகர் பகுதிக்கு குழாய் விஸ்தரிப்பு செய்தல்.
6) ஜீவானந்தபுரம் நேரு நகர் அல்லி முத்து வீடு முதல் சிவன்புரம் வரை வடிகால் அமைக்கும் பணி மேற்கொள்ளும்போது பூமிமேல் பதிக்கப்பட்டுள்ள குடிநீர் குழாயை பூமிக்குள் பதித்து தருதல். அப்பகுதியில் உப்புநீர் குழாய் விஸ்தரிப்பு செய்தல்.

**<u>பொருள் : 27</u>**

திருமதி.எம்.பிரியா ஜீவாசுப்பிரமணியம், 9வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் தீர்மானங்களை வாசித்தல்.

1) காமராஜ் நகர் செல்லும் இரயில்வே பாலத்தில் 20 மீட்டர் நீளத்திற்கு பேவர் பிளாக் அமைத்தல்.
2) காந்தி நகர் மற்றும் காமராஜ் நகர் பகுதிகளில் வடிகால் வசதி செய்தல்.
3) காந்தி நகர் பகுதியில் உள்ள 3 குறுக்கு தெருக்களில் தார்சாலை அமைத்தல்.
4) காந்தி நகர் மற்றும் காமராஜ் நகர் பகுதிகளில் விடுபட்ட குறுக்கு சாலைகளில் தார்சாலை அமைத்தல்.

**<u>பொருள் : 28</u>**

திரு.மா.கண்ணப்பன், 14வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் தீர்மானங்களை வாசித்தல்.

1) டி.ஜி.புதூர் மதியழகன் வீட்டில் இருந்து பிள்ளையார் கோவில் வீதி வரை கான்கிரீட் சாலை மற்றும் வடிகால் கட்டுதல்.
2) சுப்பையகவுடர் வீட்டில் இருந்து பி.ராஜு வீடு வழியாக சரவணன் வீடு வரை கான்கிரீட் சாலை அமைத்தல்.
3) சுப்பையன் வீடு சந்திலிருந்து ருக்மணி வீடு கான்கிரீட் சாலை அமைத்தல்.
4) துரைசாமி வீடு சந்து கான்கிரீட் சாலை அமைத்தல்.
5) சரஸ்வதி நகர் பகுதியில் வடிகால் மற்றும் தார்சாலை அமைத்தல்.
6) டி.ஜி.புதூர் வி.கே.நகர் பகுதியில் வடிகால் மற்றும் தார்சாலை அமைத்தல்.
7) நந்தகுமார் ஸ்டேடியம் முதல் கோடதாசனூர் வரை மின் கம்பம் அமைத்து தெருவிளக்கு பொருத்துதல்.
8) சரஸ்வதி நகர் முதல் ஜெயகுமார் தோட்டம் வரை மின் கம்பம் அமைத்து தெருவிளக்கு பொருத்துதல்.
9) செல்வராஜ் வீட்டில் இருந்து பச்சைவண்ணன் வீடு வரை, விஜயராணி வீட்டில் இருந்து ராமையகவுடர் வீடு வரை வடிகால் அமைத்தல்.

10) மக்கள் பழனிச்சாமி வீட்டில் இருந்து பிள்ளையார் கோவில் வீதி வரை ராகவன் வீட்டு வழியாக தார்சாலை அமைத்தல்.

**<u>பொருள் : 29</u>**

திருமதி.ஆர்.நித்யா, 15வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் தீர்மானங்களை வாசித்தல்.

1) மங்கலக்கரைப்புதூர் குருந்தமலை ரோடு, எம்.ஜி.ஆர்.காலனி மற்றும் கலைஞர் நகரில் பழுதடைந்துள்ள தார்சாலைகள் சீரமைத்தல்.

2) சுந்தரம்மாள் லே-அவுட் பகுதியில் உள்ள சாலைகளில் கான்கிரீட் சாலை அமைத்தல்.

3) மங்கலக்கரைப்புதூர் கலைஞர் நகர், குருந்தமலை ரோடு மற்றும் சுந்தரம்மாள் லே-அவுட் பகுதிகளில் வடிகால் வசதி செய்தல்.

4) மங்கலக்கரைப்புதூரில் இருந்து காரமடைக்கு செல்லும் வழியில் பெருமாள் கோவிலுக்கு அருகில் சேதமடைந்த குடிநீர் குழாயை சரிசெய்தல்.

5) எம்.ஜி.ஆர்.காலனி பகுதியில் பொது கழிப்பிடம் கட்டுதல்.

**<u>பொருள் : 30</u>**

திருமதி.கவிதா நடராஜன், 16வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் தீர்மானங்களை வாசித்தல்.

1) முல்லை நகர் பகுதியில் சாலை வசதி மற்றும் வடிகால் வசதி செய்தல்.

2) பயனீர் எஸ்டேட் பகுதியில் சாலை வசதி மற்றும் வடிகால் வசதி செய்தல்.

3) கொண்டசாமி நாயுடு நகர் பகுதியில் விடுபட்ட கழிவுநீர் கால்வாய் வசதி செய்தல்.

4) பயனீர் எஸ்டேட் விநாயகர் கோயில் அருகே 30 சென்ட் பூங்கா இடத்தில் பூங்கா அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல்.

**<u>பொருள் : 31</u>**

திருமதி.வெ.மலர்கொடி, 17வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் தீர்மானங்களை வாசித்தல்.

1) அம்பேத்கர் நகர் பகுதி முழுவதும் தார்சாலை அமைத்தல்.

2) அம்பேத்கர் நகர் பகுதியில் பழுதடைந்துள்ள வடிகால்கள் சீரமைத்தல்.

3) அம்பேத்கர் நகர் கார்த்திக் வீடு முதல் சுப்பு வீடு வரை வடிகால் கட்டுதல்.

4) சாஸ்திரி நகர் வெள்ளிங்கிரி வீடு முதல் சரசு வீடு வரை கான்கிரீட் சாலை மற்றும் வடிகால் கட்டுதல்.

5) சாஸ்திரி நகர் பெருமாள் வீடு முதல் கருப்பன் வீடு வரை கான்கிரீட் சாலை மற்றும் வடிகால் கட்டுதல்.

6) சாஸ்திரி நகர் தெற்கு பகுதியில் பொது கழிப்பிடம் கட்டுதல்.

7) பட்டிக்காரன்பாளையம் செண்பகம் வீடு முதல் கருப்புசாமி வீடு வரை வடிகால் கட்டுதல்.

8) காமாட்சியம்மன் நகர் கண்ணம்மாள் வீடு முதல் சுப்பிரமணி வீடு வரை கான்கிரீட் சாலை அமைத்தல்.

9) காமாட்சியம்மன் நகர் ரத்னசபாபதி வீடு முதல் சீனிவாசன் வீடு வரை தார்சாலை மற்றும் வடிகால் கட்டுதல்.

10) காமாட்சியம்மன் நகர் ஆனந்த கிருஷ்ணன் வீடு முதல் ரவி வீடு வரை தார்சாலை மற்றும் வடிகால் கட்டுதல்.

11) கே.கே.நகர் பகுதியில் நாராயணன் வீடு முதல் தேவராஜ் வீடு வரை தார்சாலை அமைத்தல்.

12) கே.கே.நகர் பகுதியில் சுரேஷ் வீடு முதல் கதிரவன் வீடு வரை தார்சாலை அமைத்தல்.

13) கே.கே.நகர் பகுதி முழுவதும் வடிகால் கட்டுதல்.

14) கே.கே.நகர் பகுதியில் குடிநீர் விநியோகம் சீராக்க 2” PVC குழாயை மாற்றி 3” PVC குழாய் விஸ்தரிப்பு செய்தல்.
14) ஸ்ரீலட்சுமி நகர் முழுவதும் தார்சாலை மற்றும் வடிகால் கட்டுதல்.

**பொருள் : 32**

திருமதி.சு.சாந்தி, 18வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் தீர்மானங்களை வாசித்தல்.

1) கே.ஆர்.நகர் சக்திவேல்-செல்வராஜ் வீட்டின் முன்புறம் 1 தெருவிளக்கு பொருத்துதல்.
2) சிறுமுகை ரோடு விறகு கடை சந்தில் 2000 லிட்டர் கொள்ளளவு கொண்ட சின்டெக்ஸ் வைத்து மேடை அமைத்தல்.
2) கே.ஆர்.நகர் பகுதியில் வடிகால் கட்டுதல்.
3) கே.ஆர்.நகர் பகுதியில் தார்சாலை அமைத்தல்.
4) சிறுமுகை ரோடு விறகு கடை சந்தில் குடிநீர் விநியோகம் சீராக்க 2” PVC குழாயை மாற்றி 3” PVC குழாய் விஸ்தரிப்பு செய்தல்.

**பொருள் : 33**

திருமதி.மல்லிகா ஸ்ரீதர், 21வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் தீர்மானங்களை வாசித்தல்.

1) பாரதியார் பகுதி முழுவதும் சாலை புதுப்பித்தல்.
2) அண்ணா வீதி முழுவதும் சாலை புதுப்பித்தல்.
3) கண்ணார்பாளையம் ரோடு பகுதி அளவில் சாலை புதுப்பித்தல்.
4) கண்ணார்பாளையம் ரோடு ஓம் சக்தி கோயில் பின்புறம் உள்ள பாலத்தை புதுப்பித்தல்.
5) கண்ணார்பாளையம் ரோடு கே.சு.மணியம் வீடு பகுதியில் சிறுபாலம் அமைத்தல்.

**பொருள் : 34**

திருமதி.மஞ்சுளாதேவி ராஜகோபால், 22வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் தீர்மானங்களை வாசித்தல்.

1) தோப்புக்கார முதலியார் சந்தில் கான்கிரீட் சாலை மற்றும் வடிகால் கட்டுதல்.
2) நேஷனல் ரங்கசாமி முதலியார் சந்தில் உப்புநீர் சின்டெக்ஸ் 3000 லிட்டர் கொள்ளளவு கொண்ட டேங்க் வைத்து மேடை அமைத்தல்.

**பொருள் : 35**

திரு.ப.ராமமூர்த்தி, 24வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் தீர்மானங்களை வாசித்தல்.

1) தெப்பகுளம் முதல் ரயில்வே கேட் வரை உப்புநீர் குழாய் விஸ்தரிப்பு செய்தல்.
2) பெரியார் நகரில் சிறு ஓடை உள்ளது அதற்கு குழாய் அமைத்து நடைபாதை ஏற்படுத்தி தருதல்.
3) சமயபுரம் முதல் மகாத்மா காந்தி நகர் வரை உள்ள ரங்கமணி பள்ளத்தில் ஒரு புறம் தடுப்பு சுவர் கட்டுதல்.

**பொருள் : 36**

திருமதி.எஸ்.சித்ரா எபினேசர், 26வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் தீர்மானங்களை வாசித்தல்.
1) அண்ணாமலை வீதி மற்றும் குறிஞ்சி நகர் ஆகிய பகுதிகளில் இரண்டு பக்கங்களிலும் வடிகால் கட்டுதல்.
2) அண்ணாமலை வீதியில் சிறுபாலம் கட்டுதல்.

பொருள் : 37

திருமதி.வெ.உஷா வெங்கடேஷ், நகரமன்றத் தலைவரின் தீர்மானங்களை வாசித்தல்.

1) சஞ்சய் காந்தி நகர் சுகுணா வீடு முதல் காயத்ரி வீடு வரை வடிகால் கட்டுதல்.
2) சஞ்சய் காந்தி நகர் சரோஜினி வீடு முதல் ருக்மணி வீடு வரை வடிகால் கட்டுதல்.
3) பெள்ளாதி ரோடு சுசீலா வீடு முதல் சகுந்தலா வீடு வரை வடிகால் கட்டுதல்.
4) சஞ்சய் காந்தி நகர் பகுதியில் உப்புநீர் குழாய் விஸ்தரிப்பு செய்தல்.
5) 27 வார்டுகளில் நகரின் பாதுகாப்பு கருதி நமக்கு நாமே திட்டத்தில் CCTV கேமரா பொருத்துதல்.

நகரமன்றத் தலைவர்,
காரமடை நகரமன்றம்.

**30.08.2022 ஆம் நாள் நடைபெற்ற நகரமன்ற சாதாரணக் கூட்டத்தின் தீர்மானங்கள்**

**பொருள் எண்.01 முதல் 02 முடிய**

பதிவு செய்யப்பட்டது.

**பொருள் எண்.03 முதல் 07 முடிய**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண்.08 முதல் 09 முடிய**

ஒத்திவைக்கப்பட்டது.

**பொருள் எண்.10 முதல் 22 முடிய**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண்.23 முதல் 37 முடிய**

தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஒ.ம்/ திருமதி.உஷா வெங்கடேஷ்
தலைவர்,
காரமடை நகர்மன்றம்

//உண்மை நகல் //

V Ushavenkatesh
தலைவர்,
காரமடை நகர்மன்றம்

30/8/22